**சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**சைவநெறி - தரம் 02 / மூன்றாந் தவணை – இரண்டாம் வாரம்**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

**<u>6.2 – இறையடியார்கள்.</u>**

<u>திருநாவுக்கரசர் படிக்காசு பெற்றக் கதை</u>



01). திருநாவுக்கரசர் பஞ்சம் போக்கிய படிக்காசு என்ற கதையை முழுமையான மெய்ப்பாடுகளுடன் பிள்ளைகள் கேட்பதற்காக வாசித்துக் காட்டுக.
( பாடநூல் தரம் -02 / பக்கம் – 60 ) முதலில் கதை கூறும் விதத்தில் கூறுக.
கதையை வாசித்து கேட்கச் செய்க.

02). இக்கதையில் வரும் கதாபாத்திரங்களைப் போலவே பேசுவதற்கும் நடிப்பதற்கும் வழிப்படுத்துக.

03). இறைவனின் கருணையை எடுத்துக்காட்டும் வகையில் முழுமையான கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் இக்கதையைப் பிள்ளையை கூறுவதற்கு வழிகாட்டுங்கள்.

- பிள்ளை பாடநூலிலுள்ள கதையை வாசிக்க முடியுமாயின் சிறப்பு.

04). கீழ்வரும் வினாக்களை வினாவுவதன் மூலம் கதையை கதையில் வரும் கதாபாத்திரங்கள், சம்பவங்களை விளங்குவதற்கான பயிற்சியாகும்.

i). திருவீழிமிழலை என்ற ஊரில் பஞ்சம் வரக் காரணம் என்ன? ........................................

ii). அங்கு வந்த நாயன்மார்கள் இருவரும் யாவர்? ...........................................................

iii). திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசருடன் வேறு யார் வந்தார்கள்? ................................

iv). இருவரும் அவ்வூரில் எதனைக் கண்டனர்? ..............................................................

v). யாரிடம் முறையிட்டனர் ? ......................................................................................

vi). சிவபெருமான் தினமும் யாதுசெய்தார்? ...................................................................

vii). படிக்காசுபெற்ற நாயன்மார்கள் எதனைச் செய்தனர்? ..................................................

viii). பஞ்சம் போக்கிய படிகாசைக் கொடுத்தவர் யார்? ......................................................

ix). திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் சந்தித்த ஊர் எது? ........................................

x). பஞ்சம் போக்கிய படிக்காசு என்ற கதையைக் கூறுக. ..................................................

**பிறர் துயர், களைவோம்.**